REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆடி மீ 9உ சனி (24—7—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆடி மீ 10உ ஞாயிறு (25—7—54) | இதழ்: 35

பல்கலைக் கழக கல்வி வளர்ச்சியில் குறுக்கிடாதீர்!

நிதி அமைச்சர் தேஷ்முக் கருத்து

பெண்கள் கல்வி பற்றி புரியவில்லையாம்!

சரியான அறிவுரை இல்லாமையே ஒழுங்கீனத்திற்கு காரணமாம்!

கூடிப் பேசி திட்டமிட கோரிக்கை!

"நல்லதோர் கால மாறுதல் இப்போது நடைபெறுகிறது. பல்கலைக் கழக கல்வியில் என்ன தவறு உள்ளதென்பது நமக்குத் தெரியவில்லை!

"பெண்களுக்கு எத்தகைய கல்வி தேவை என்பதும் நமக்குப் புரியவில்லை! மாணவர்களிடையே காணப்படும் ஒழுங்கீனங்களுக்கு எவை காரணம் என்பதையும் நாமறிந்தோமில்லை!

"நாட்டின் தலைவர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் சரியான அறிவைப் பெறும் வாய்ப்பைப் பெறாத காரணத்தால்தான் மாணவர்களிடையே ஒழுங்கீனம் காணப்படுகிறது எனலாம்.

"ஆசிரியர்களும், நாட்டின் தலைவர்களும் சேர்ந்து விவாதித்து, தற்போதைய சூழ்நிலையில் என்ன குறைபாடு காணப்படுகிறது என்பதை ஆராய்ந்தால், நாம் விரும்புகிற நல்ல முடிவைக் காண முடியுமென்று நான் நம்புகிறேன்.

"இப்போது கல்லூரிகளிலிருந்து தேர்வு பெற்று வெளிவரும் மாணவர்கள் என்ன செய்வது என்பது எனக்குத் தெரியவில்லை.

"எவ்வளவு தொல்லைகள் ஏற்பட்டாலும், பல்கலைக் கழக கல்வியைப் பரப்புவதில் எவ்விதமான தடைகளோ, குறுக்கீடோ இருக்கக்கூடாது என்பதை நான் நன்குணர்ந்திருக்கிறேன்:

"தேசீயக் கண் கொண்டு இப்பிரச்னையை அணுகும்போது பல்கலைக் கழகக் கல்விக்கு செயற்கையாகத் தடைகள் விதிப்பது தவறாகும்."

—இவ்வாறு, 21—7—54 அன்று, காரைக்குடியில் டாக்டர் அழகப்ப செட்டியார் பெண்கள் கல்லூரியின் ஆரம்ப விழாவில் பேசும்போது, இந்திய சர்க்கார் நிதி அமைச்சர் தேஷ்முக் தன் கருத்துக்களைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:— "பல்கலைக் கழகக் கல்வியில் நான் நிபுணன் அல்ல, பெண்கள் கல்வியைப் பொறுத்த மட்டில் நான் அதுபற்றி மிகக் குறைவாகவே அறிந்துள்ளேன்.

ஆனால் நிதி அமைச்சர் என்ற முறையிலும், திட்டக் கமிஷனின் உறுப்பினன் என்ற முறையிலும், பல்கலைக் கழகக் கல்வி பற்றி பிரச்சினைகளில் கருத்தைச் செலுத்தாமலிருக்க முடியாது.

நாட்டில் காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி தேஷ்முக் பேசுகையில் மக்களாட்சி நடைபெறுகிற மற்ற நாடுகளில் இப்பிரச்சினையைப் போக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கிறார்கள் என்பதை அறிந்து, இந்தியாவிலும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முயற்சி செய்வதாக குறிப்பிட்டார். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதில் கிடைத்திருக்கிற வெற்றி கண்ணுக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால், நாட்டிலே பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்ட பிறகு அனைவருக்கும் தங்களால் வேலை தர முடியுமென்று தான் நம்புவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கோட்டை இடிந்து 300 பேர் மரணம்!

வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட வேதனை!

திபேத்தில் இந்திய அதிகாரிகள் பலர் மாண்டனர்

காளம்போங், ஜூலை 23—

திபேத்தில் நாம்சுங் ஆற்றின் கரையில் உள்ள கோட்டை ஒன்று பலத்த மழையாலும், வெள்ளப் பெருக்கின் காரணமாகவும் இடிந்து வீழ்ந்துவிட்டது.

இடிபாடுகளுக்கிடையே சிக்கிக் கோட்டைக்குள்ளிருந்த 300 பேர் மாண்டனர் என்று தெரிகிறது. அவர்களில் பலர் இந்தியர்கள் என்று தெரிகிறது.

திபேத்தின் வர்த்தக நகரான கயான்ட்சி அருகே இருந்த இக்கோட்டை அண்மையில் திபேத்தில் பெய்த பெருமழையாலும், வெள்ளப் பெருக்காலும் கலகலத்துப் போய் திடீரென இடிந்து வீழ்ந்துவிட்டதாம்.

கோட்டை இடியும்போது அதன் உள்ளிருந்த யாரும் தப்ப முடியவில்லையாம்.

மரணமடைந்தவர்களில் இந்தியத் தபால் தந்தி இலாகா சிப்பந்திகளின் பாதுகாவலர்களும்; இந்திய வர்த்தக ஏஜென்சியைச் சேர்ந்தவர்களும் உள்ளனர் என்று தெரிகிறது.

ஜூலை 17-ம் தேதியன்று கயான்ட்சி நகரம் ஒரே வெள்ள மயமாய்க் காட்சி அளித்ததாம்.

சீன இராணுவப் படையினரும், அதிகாரிகளும் இடிபாடுகளைக் கிளறி இதுவரை ஐந்து இந்திய அதிகாரிகளின் உடலை வெளியே எடுத்துள்ளனர் என்று தெரிகிறது.

காளம்போங்கிலிருந்து மீட்சிக் குழுவினர் அங்கு சென்றிருக்கின்றனர்.

கயான்ட்சியில் உள்ள இந்திய அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்துள்ளனர், என்றாலும் மரணமடைந்தோரின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்குமென்று நம்புகிறார்களாம்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கயான்ட்சியில் இந்திய வியாபாரிகள் உட்பட 25000 பேர் வாழ்கின்றனர் என்று தெரிகிறது.

மூவாயிரம் சிறுர்கள் படிப்பில் மண்

கட்டணத்தை சர்க்கார் உயர்த்தியதின் விளைவு

அமதாபாத், ஜூலை 21—

ஆரம்ப உயர் வகுப்புப் படிப்பிற்கான மாதக் கட்டணத்தை, பம்பாய் சர்க்கார் நடைமுறை ஆண்டில் உயர்த்திவிட்டது.

இக் கட்டண உயர்வை பெற்றோர்கள் எதிர்த்தனர். கட்டணத்தை உயர்த்தி இட்டக் கட்டளையை மாற்றவோ, திரும்பப் பெறவோ முடியாது என பம்பாய் சர்க்கார் கூறிவிட்டது.

கட்டணத்தைச் செலுத்த முடியாத காரணத்தினால், பம்பாயில் உள்ள கெய்ரா மாவட்டத்தில் மட்டும் 3,000 மாணவச் சிறுர்கள், தங்கள் படிப்பைச் சாகவிட வேண்டியவர்களாயினர்.

இந்த அலங்கோலத்தை, கல்வித் துறை அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

உரலுக்கு ஒரு புறம் இடி! மத்தளத்திற்கு இரு புறமும் அடி!

தாடிசாமியார்களின் பரிதாப நிலை!

கட்டாக், ஜூலை 22—

கட்டாக் நகரத்தில் சின்னாட்களுக்கு முன் சில சாதுக்களுக்கும் போலீசாருக்கும் கைகலப்பு ஏற்பட்டதாக செய்தி வெளிவந்ததல்லவா. அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தாடி வைத்திருக்கிற சாமியார்களைக் கண்டாலே, கட்டாக் நகர மக்களுக்குப் பீதி ஏற்படுகிறதாம்.

பிரமோ குமார் தாஸ் வியாஸ் என்ற அகமதாபாத் வாசி தன் மனைவி 5 ஆண்டுகட்கு முன் இறந்துவிடவே, துறவுபூண்டு, தாடி மீசையுடன் யாத்திரை கிளம்பினவர், பூரிக்குச் செல்வதற்காக கட்டாக் வந்தாராம். அவரது தாடிமீசையுடன் கூடிய துறவுக் கோலத்தைக் கண்ட கட்டாக் மக்கள், ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டுவிட்டனர். ஒரு போலீசார் உடனே அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு இட்டுச் சென்றார். அங்கு அவர் விசாரிக்கப்பட்ட பின் தாடியை எடுத்து விடுமாறு போலீசார் அவருக்கு புத்தி கூறினர்.

விளைவு........

துறவி தாடியை எடுத்துவிட்டார். அதனால் தனது துறவிக் கோலத்தைக் காட்டி பிச்சை எடுத்து உண்பதும், ரயிலில் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்வதும் இயலாது போய்விட்டதாம். அதனால் வியாஸ் என்ற அந்தச் சாமியாரின் நிலை மிகவும் பரிதாபமாயிருக்கிறதாம். வியாஸ் கன்றுகள் மேய்க்கவும் செய்வாராம்.

அகதிகளுக்கு நஷ்ட ஈடு

காச நோயால் கஷ்டப்படுவோருக்கு மத்திய அரசு உதவி

புதுடில்லி, ஜூலை 20—

இடம் பெயர்ந்த மக்களில் காச நோயால் பிடிக்கப்படுபவர்கள், மேற்கு பாகிஸ்தானில் விட்டுவிட்டு வந்த தங்கள் அசையாப் பொருள்களுக்கு நஷ்டஈடு கோரி மனுச்செய்து கொள்ளலாம் என மத்திய அரசாங்கம் பத்திரிகைக் குறிப்பொன்றின் மூலம் அறிவித்துள்ளது. இம்மாதிரி நஷ்டஈடு பெறுவதற்கு தகுதி உடையவர்கள் என,

காச நோய் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டோ, அனுமதி பெறுவதற்கு அங்கீகாரம் பெற்றோ இருப்பவர்கள், சாதாரணமாக வெளியில் இருந்து சிகிச்சை பெறுபவர்கள் ஆகியோரும்,

மத்திய அரசாங்க அகதிகள் புனரமைப்பு நிதியிலிருந்து மாநில அரசாங்கங்களால் 1954 ஏப்ரலுக்கு முன் பொருளாதார உதவி பெற்றிருக்கிற காச நோயாளிகள், ஆகியோரும்,

கண் பார்வை இழந்தவர்கள், ஒரு கை, கால் அல்லது இரண்டு கைகளும், கால்களும் இழந்த முடமானவர்கள் ஆகியோரும் கருதப்படுவர்.

அக்டோபர் 31-ம் தேதிக்குள் இந்த விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

சென்னை பல்கலைக் கழக துணைவேந்தர்

டாக்டர் லட்சுமணசாமி மீண்டும் நியமனம்

சென்னை, ஜூலை 23—

சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக டாக்டர் லட்சுமணசாமி மேலும் மூன்றாண்டுகளுக்கு பணிபுரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆகஸ்டு 19-ம் தேதியுடன் இப்போதுள்ள அவரது துணைவேந்தர் பதவிக் காலம் முடிவடைகிறது. ஆகஸ்டு 20 முதல் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு அவர் துணைவேந்தராக

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 24—7—54 சனி

விதியின் இடுக்கில் விஷமம்!

★

சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரின் தேர்வு பற்றி இரண்டு தினங்களுக்கு முன்னால், நாம் நமது கருத்தைத் தெரிவித்திருக்கிறோம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் செனட் சபை துணைவேந்தர் பதவிக்கு டாக்டர் லட்சுமணசாமி ஒருவரையே சிபார்சு செய்திருக்கிறது. செனட் சபையின் இச்செய்கையை, ஆதிக்கபுரியினர் சிலர் கண்டிக்க ஆரம்பித்துள்ளனர். ஒரே ஒருவரை மட்டும் நியமனம் செய்ததின் மூலம் பல்கலைக் கழகத்தின் சட்ட திட்டங்கள் மதிக்கப்படவில்லையென்றும், துணைவேந்தரின் தேர்தலில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் செனட் சபை எதேச்சாதிகாரமாக நடந்துகொண்டிருக்கிறது என்றும் சிலர் தவறான முறையில் பேசவும் எழுதவும் செய்கின்றனர்.

துணைவேந்தர் பதவிக்கு மூன்று பேரை சிபார்சு செய்யாமல் ஒருவரை மட்டுமே சிபார்சு செய்வது எப்படி தேர்தலாகும் என்று அவர்கள் முணுமுணுக்கின்றனர்.

செனட் சபை மூன்று பேரைச் சிபார்சு செய்வதும், அந்த மூவரிலே ஒருவரை வேந்தர் பொறுக்கி எடுத்து துணை வேந்தராக நியமனம் செய்வதும் தவறு என்று சொல்ல முடியாது.

ஆனால் துணைவேந்தர் பதவிக்கு டாக்டர் லட்சுமணசாமி அவர்கள் ஒருவர்மட்டுமே போட்டியிட தயாராக இருந்தார். வேறு யாருமே அப்பதவிக்குப் போட்டியிட முன்வரவில்லை. அவ்வாறு முன்வராத போது போட்டியிட்ட ஒருவரைத் தேர்ந்தெடுத்து சிபார்சு செய்வதைத் தவிர வேறு வழி கிடையாது செனட் சபைக்கு. எனவே நிலைமைக்கேற்ப, டாக்டர் அவர்கள் பெயரை மட்டும் செனட்சபை துணைவேந்தர் பதவிக்கு சிபார்சு செய்தது.

ஒருவருமே துணைவேந்தர் தேர்தலுக்குப் போட்டியிட முன்வராத நிலையில், செனட் சபை உறுப்பினர்கள், போட்டியில் கலந்து கொள்ளுமாறு 'போட்டிக்கு வாருங்கள் போட்டி போடுங்கள்' என, வீதி வீதியாகச் சென்று, விளம்பரம் செய்ய முடியாது. எனவே, போட்டியிட முன்வந்த ஒருவரை மட்டுமே அப்பதவிக்கு சிபார்சு செய்ததில், அவர்கள் வேண்டுமென்றே அப்படி நடந்துகொண்டனர் என அவர்கள் மீது குற்றம் சாட்டுவதற்குத் துளியும் ஆதாரம் கிடையாது.

சென்னைப் பல்கலைக் கழகம் உலகம் பார்த்து வியக்குமளவுக்கு ஓங்கி வளர்ந்துள்ள ஒரு உன்னதமான அமைப்பு எத்தனையோ நல்லறிவாளர்களையும், நாட்டிற்கு உழைக்கும் பெரியோர்களையும், புலவர்களையும், விஞ்ஞானிகளையும் சென்னைப் பல்கலைக் கழகம் தயார் செய்துள்ளது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த அமைப்பொன்றில் துணைவேந்தராக இருக்க தகுதி பெற்றோர் நாட்டிலே பலர் உண்டு என்றாலும், அவர்களெல்லாம் தலைசிறந்தவரான டாக்டர் லட்சுமணசாமி அவர்களோடு போட்டியிட முன்வராதபோது, திரை மறைவில் இருந்துகொண்டு ஆதிக்கபுரியினர் அர்த்தமற்ற கூக்குரலிடுவது விந்தையாக இருக்கிறது.

துணை வேந்தர் பதவிக்கு பலர் போட்டியிட முன்வராதது, வேறு யாருமே அப்பதவிக்குத் தகுதியானவர்கள் இல்லை என்பதால் அல்ல டாக்டர் லட்சுமணசாமி அவர்கள் இருக்கும்போது, அவர் சேவை அவசியமாக இருக்கும்போது நாம் ஏன் போட்டியிட வேண்டுமென்ற எண்ணம்தான் அவருக்கு போட்டியாக யாரையும் நிற்கவிடாமல் செய்துவிட்டது.

இப்போதைய துணைவேந்தர் பதவிக் காலம் முக்கியமான காலமாகும். சென்னை பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழா அடுத்த ஆண்டில் நடைபெற இருக்கிறது. அச்சந்தர்ப்பத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்ட ஒருவர் துணைவேந்தராக இருப்பது சாலச் சிறந்ததாகும்.

அந்தப் பாக்கியம், ஒரு திராவிடப் பெருங்குடி மகனுக்குக் கிடைத்து விடுகிறதே என்று ஆதிக்கபுரியினர் வயிறு பற்றி எரியாமல் இருக்க முடியுமா?

எனவே விதியின் இடுக்கில் நுழைந்து கொண்டு, அரவம் போல தலை நீட்டி, கொடும் விஷத்தை அவர்கள் கக்கமுன் வந்திருக்கின்றனர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் இந்த ஆதிக்க புரியினரின் சூழ்ச்சிகளுக்கு இடமில்லாது போய்விட்டது கண்டு புழுங்கும் நிலைமைதான் இது.

ஒருவரைத் தேர்ந்தெடுத்தாலும் அது தேர்தல்தான் இதன் மூலம் செனட் சபை தேர்தலையும் நடத்தியுள்ளது பொறுக்கி எடுத்தும் இருக்கிறது என்று நிச்சயமாகக் கூறலாம்.

விதிமுறைகளில் தவறு ஒன்றுமில்லை அதன் இடுக்கிலே மறைந்து கொண்டு விதியைக் காட்டி மதியிழந்து வாதிடக் கிளம்பும் மனமாசில்தான் குறைபாடு உள்ளது. இந்தச் சுயநலப் போக்கும், நச்சுச் செயலும் என்று மறைகிறதோ அன்றுதான், இந்த நாட்டு மக்கள் வாழ்வில் நல்லுறவு உதயமாகும்.

'திராவிட நாடு அமைவதை உலகில் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது!'

—நமது நிருபர்

'பெரும்பாலான மக்கள் விரும்பினால் அதை எவரும் தடுக்கமாட்டார்கள்!

அதற்கு அரசியல் சட்டத்தில்கூட இடம் இருக்கிறது!'

—டாக்டர் ரகுவீரா

டாக்டர் ரகுவீரா அவர்களுடன் நமது 'நம் நாடு' நிருபர் 22—7—54 அன்று கவர்னர் மாளிகையில் சந்தித்து நடத்திய உரையாடலின் ஒரு பகுதி நேற்று தந்திருந்தோம். அதன் தொடர்ச்சி இன்று தரப்படுகிறது:—

ர. வீ.:—பல மாநிலங்களையும் சேர்த்து ஆளும் நிர்வாக வசதிக்காகவும், எல்லா ராஜ்யங்களுக்கும் பரஸ்பரம் உதவி செய்வதற்காகவும் எல்லா ராஜ்யங்களுக்கும் பாதுகாப்பு தருவதற்காகவும்தான் மத்திய அரசாங்கம் இருக்கிறது. அதை நீங்கள் ஆதிக்கம் செலுத்தும் அரசாங்கம் என்று வர்ணிப்பது எப்படிப் பொருந்தும்?

ந. நி.:—மத்திய அரசாங்கம் எப்படி நடைபெறுகிறது?

ர. வீ.:—பல மாநிலங்களும் தங்கள் சக்திக்கேற்றவாறு தரும் வரிப் பணத்தைக் கொண்டு நடைபெறுகிறது.

ந. நி.:-பலமாநிலங்களினுடைய வரிப் பணத்தைக் கொண்டு நடைபெறும் ஒரு மத்திய அரசாங்கம் அந்த மாநிலங்களுக்கு பரஸ்பரம் உதவுவதற்காகவும், அவைகளுக்குப் பாதுகாப்பளிப்பதற்காகவும்தான் இருக்கிறது என்று சற்றுமுன் சொன்னீர்கள் அல்லவா?

ர. வீ.:— ஆமாம்.

ந. நி.:-அப்படி ஆனால் அந்த மாநிலங்கள் தாங்கள் வரியாகத் தரும் பணத்திற்கு தகுந்த பிரதி பலனை மத்திய அரசிடம் இருந்து எதிர்பார்ப்பதில் தவறில்லையே?

ர. வீ. - நிச்சயமாகத் தவறில்லை.

ந. நி:- நான் சொல்கிறேன், தென்னாட்டவர் வடநாட்டவருக்குத் தரும் பணத்திற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பிரதிபலன் கிடைப்பதில்லை! மத்திய அரசாங்கத்திற்கு பெரும் தொகையை வரியாகக் கொடுத்துவிட்டு நாங்கள் ஏன் நஷ்டமடைய வேண்டும். மத்திய அரசாங்கத்துடன் சேர்ந்திருப்பதனால் தானே இப்படி ஒரு தொல்லையும் நஷ்டமும் ஏற்படுகிறது? ஆகவே பிரிந்து தனியாக இயங்குவதினால், மத்திய அரசாங்கத்திற்கு தருகிற பணம் மிச்சம் தானே. லாபகரமானதாக இருக்க முடியுமே தனியாக வாழ்ந்தால் என்பதும் நாங்கள் பிரிந்து போவதற்கான காரணங்களில் ஒன்றாக கொள்வதில் தவறென்ன?

ர. வீ.:- சரி. நீங்கள் தருகிற பணத்திற்கு சரியான பலன் கிடைக்கவில்லை என்கிறீர்கள் ஆனாலும் அந்தப் பணம் யாருக்காவது உபயோகப்படுகிறதென்பது உண்மை தானே. நீங்கள் தரும் அந்தப் பணத்தை உபயோகித்துக் கொள்கிறவர்கள் யார்?

ந. நி:- யார்? யாரோ! எங்களையும் சேர்த்து ஆளப்படுகிற ஒரு ஆட்சியில் உள்ள வடநாட்டுக்காரர்கள்.

ர. வீ. - நீங்கள் என்மனதை வெகுவாகப் புண்படுத்துகிறீர்கள் உங்களுக்குச் சொல்கிறேன். இப்போது புதியதாகக் கட்டப்பட்டுள்ள பெரும் அணைக்கட்டுத் திட்டமான பக்ரா நங்கல் திட்டத்தினால் பலனடையப்போவது, ராஜஸ்தான், பெப்சு, பஞ்சாப் ஆகிய பிரதேசங்கள் ஆனால் அந்த ராஜ்யங்கள் எல்லாம் இத்திட்டத்திற்குப் பணம் தரவில்லை. மத்திய அரசாங்கம் தருகிறது. பல மாநிலங்களிடமிருந்து வரியாகப் பெற்ற பணத்தை மத்திய அரசு அந்தப் பாலை வனப் பிரதேசங்களை செழிப்புள்ளதாக்குவதற்குத் தருகிறது வடநாட்டில் இருக்கிற இந்த மாநிலங்களைத் தவிர, மற்றைய மாநிலங்கள், பம்பாய், மத்ய பாரத் போன்றவை — உங்கள் மாதிரிச் சொல்லவில்லை,—எங்கள் பணத்தை வேறு ராஜ்யங்களுக்குத் தருகிறீர்களே, - என்று! நீங்கள் மட்டும், சொல்கிறீர்களே! ஏன்?

ந. நி.: நீங்கள் குறிப்பிட்ட பக்ரா நங்கல் திட்டங்களைப் போன்று பல திட்டங்களை 2 ஆயிரத்திற்கும் அதிகமான கோடி ரூபாய் செலவில் மத்திய அரசாங்கம் 5 ஆண்டுத் திட்டம் என்ற பெயரில் திட்டமிட்டு நிறைவேற்றி வருகிறது. அந்த 5 ஆண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தென்னாட்டின் நிலைமை என்ன தெரியுமா? நாங்கள் வெறும் பார்வையாளர்களாகவே ஆக்கப்பட்டிருக்கிறோம். அந்த மிகப்பெரும் திட்டம் நிறைவேற்றப்படுகிற பெருமையைத்தான் நாங்கள் சொல்லக் கேட்கிறோமேயன்றி வேறு ஒரு உருப்படியான பலன் தரத்தக்க பெரும் திட்டங்கள் எதுவும் எங்களுக்குக் கிடைக்கவில்லையே?

ர. வீ:—இம்மாதிரி ஏதேனும் உங்களுக்குக் குறை இருந்தால் அதைத் தீர்த்துக் கொள்ள வழிகள் இல்லையா? உங்கள் மாநில ஆட்சி மத்திய அரசினரைக் கேட்கலாமே 'ஏன் எங்கள் பகுதியில் ஒரு பெரும் திட்டம் இருக்கக் கூடாது?' என்று. இம்மாதிரி ஒருவருக்கொருவர் சுமுகமாக, சரிகட்டிக் கொள்ள வேண்டுமே அன்றி, இந்தக் குறைகளுக்காகவே பிரிந்துபோக வேண்டுமென்பது எப்படி நியாயமாகும்?

ந. நி:-பெரியவரே! பிரிந்து போக வேண்டுமென்பதற்காக நாங்கள் சொல்கிற பல வேறு காரணங்களில் இதுவும் ஒன்று; இதை நான் ஏற்கெனவே சொன்னேன், இதே ஐந்தாண்டுத் திட்டத்தைப் போலவே, பல்வேறு விஷயங்களில் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது மத்திய அரசாங்கத்தால். எத்தனை எத்தனையோ சம்பவங்கள் இருக்கின்றன. அவற்றிற்கான புள்ளி விவரங்கள் எல்லாம் என்னிடம் இப்போது தயாராக இல்லாவிடினும், மத்திய அரசாங்கம் தென்னாட்டு மக்களின் வாழ்விலும் தாழ்விலும் அக்கறை கொண்டதில்லை. நியாயமாக வடநாட்டவருக்கு, அந்த நல்ல எண்ணம் இருக்க முடியாதுதான். இதற்கு நான் ஒரு உதாரணம் சொல்லுகிறேன். இரண்டாண்டுகளுக்கு முன்னால் பீகாரில் பஞ்சாப் பகுதிகளில் வெள்ளத்தினால் பெருத்த சேதம் ஏற்பட்டது. அதைப் போன்றே தென்னாட்டிலும் தமிழகத்தில் நெற்களஞ்சியம் எனக் கருதப்படும் தஞ்சை திருச்சி மாவட்டங்களில் புயலால் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமான சேதம் ஏற்பட்டது. இந்த இரண்டிற்கும் உதவி செய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது அப்படித்தானே?

ர. வீ.:— ஆமாம்.

ந. நி:-இரண்டு பகுதிகளின் சேதாரத்திற்குத் தகுந்த முறையில் பாரபட்சம் இன்றி உதவுவதுதானே நியாயம்?

ர. வீ.:- ஆமாம்.

ந. நி:- பாரபட்சம் காட்டப்படுவது தவறுதானே?

ர. வீ.:- ஆமாம்.

ந. நி.:- பண்டித நேரு என்ன செய்தார் தெரியுமா? தனக்கு தலைக்குமேல் இருந்த வேலைகளையும் பொருட்படுத்தாது பஞ்சாப், பீகார் பிரதேசங்களுக்கு வருகை தந்து, சுற்றுப் பிரயாணம் செய்து, கண்ணீருடன் 'கவலைபடாதீர்' மக்களே! உங்களுக்கு ஏற்பட்ட இந்த கஷ்டத்தைக் காண பெரும் கவலை கொள்கிறேன். உங்கள் துயரம் தீர என்னாலானதைச் செய்கிறேன் என்று ஆறுதல் சொன்னார் அந்த மக்களிடம் கருணை காட்டினார். ஆனால் அந்தப் பண்டிதரின் கண்களுக்கு தென் கோடியிலே புயலால் பாதிக்கப்பட்டு, வீடிழந்து, சொத்து சுகம் அத்தனையும் இழந்து தவித்த தஞ்சை மக்கள் படாமல் போனதேன்? பஞ்சாப் மக்களுக்கும் பிறந்த கருணை, தஞ்சை மக்களுக்குச் சுரக்காமற் போனதேன். அவருக்கு தென்னாட்டவரும் நம் மக்கள் என்ற உணர்வு இருந்தால் இந்தப் பாரபட்சமான உணர்வு ஏற்பட்டிருக்குமா? இதில் இன்னும் ஒரு பரிதாபம் என்னவென்றால் புயல் கொடுமை இருந்த நேரத்தில் பண்டிதர் தென்னாட்டிலேயே திரு—கொச்சியிலேயே பத்து நாட்கள் இருந்தார். அப்படி இருந்தும் அவதியுறும் தஞ்சை மக்களைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

பம்பாய் தாராளம்! — சென்னை கஞ்சத்தனம்!

விழுந்து செத்தவனுடைய குடும்பத்திற்கு ரூ 2,000 உதவி!

ஆமதாபாத், ஜூலை 20—

தன் கடமையைச் செய்யும்போது மரணமடைந்த ஜெயந்திலால் பட்டேல் என்பவரின் மனைவிக்கு சர்க்கார் சார்பில் மாவட்ட போலீஸ் அதிகாரி சி. மிராண்டோ ரூ. 2,000 பரிசாக அளித்தார்.

ஜயந்திலால் பட்டேல், அகமத் நகர் ஹோம் கார்டு படையைச் சேர்ந்தவர்.

ஒரு நாள் ஜயந்திலால் பட்டேல், தன் தோழர்களுடன் காவல் காத்துக்கொண்டிருக்கும்போது சந்தேகப்படச் சிலரைப் பிடிக்க எண்ணி முயற்சித்தபோது அந்த நபர்கள் ஓடினர் என்றும் ஹோம் கார்டு படையினர் அவர்களைத் தொடர்ந்து பின்னே ஓடும்போது ஜயந்திலால் பட்டேல் கால் வழுக்கிக் கீழே விழுந்துவிட்டார் என்றும், இதன் காரணமாக அவர் மரணமடைந்தார் என்றும் தெரிகிறது.

ஜயந்திலால் மனைவிக்கும், குழந்தைகளுக்கும் வேறுயாரும் துணையில்லாத நிலைகண்டு, ஹோம் கார்டு படையினரின் அதிகாரி எம். ஜி. பி. மானக்ஜி இக்குடும்பத்திற்கு ரூ 2000 ரொக்கமாகத் தரவேண்டுமென்று சர்க்காருக்கு எழுதினார் என்று தெரிகிறது.

இவரது கோரிக்கையை சர்க்கார் ஏற்றுக்கொண்டு ரூ இரண்டாயிரம் ஜயந்திலாலகுடும்பத்திற்கும் பரிசளித்துள்ளனர்.

இது உயிரைக் காப்பாற்றியவன் குடும்பத்திற்கு ரூ 100 பரிசு!

சென்னை, ஜூலை 20—

சென்னையில் சாதாரண சாக்கடையில் இறங்கி வேலை செய்கையில், விஷவாயுவினால் மூச்சுத் திணறி இறக்கவிருந்த மூன்று பேர்களில் இரண்டு பேரைக் காப்பாற்றி மூன்றாவது நபரைக் காப்பாற்ற முயலும்போது மாண்டுபோன மில் தொழிலாளி சன்யாசி என்பவரின் மனைவியாருக்கு ரூ. 100 பரிசளிக்கப்பட்டது.

சன்யாசியின் வீரச் செயலையும், தியாகத்தையும் பாராட்டி சென்னைப் போலீஸ் கமிஷனர் பார்த்தசாரதி ஐயங்கார் ரூ. 100 பரிசுத் தொகையை அளித்தார். அத்துடன் சன்யாசியின் மனைவியாருக்கு ஒரு புடவையும் பரிசளிக்கப்பட்டதாம்.

சென்ற மே. 30-ம் தேதியன்று பெரம்பூர் ரோடில் சாதாரண சாக்கடையை 3 தொழிலாளர்கள் சுத்தம் செய்து கொண்டிருந்தனர். மேஸ்திரி மேலே நின்று கொண்டிருந்தார். உள்ளே சென்ற தொழிலாளர்கள் திரும்பி வரவில்லை, மேஸ்திரியின் அபயக் குரலைக் கேட்டு, சன்யாசி ஓடிவந்து சாக்கடைக்குள் இறங்கி இரண்டு பேரை வெளியே தூக்கிக் கொண்டு வந்துவிட்டார். மூன்றாவது தொழிலாளரைத் தூக்க உள்ளே சாக்கடையில் இறங்கிய சன்யாசி விஷவாயுவினால் இறந்துபோனார்.

கண்ணீருடன் புதை குழி தோண்டும் உறவினர்கள்!

சிங்கப்பூரில் புதைகுழி தோண்டுவோர் வேலை நிறுத்தம்

பத்தாயிரம் தொழிலாளர்களின் கோரிக்கை

சிங்கப்பூர், ஜூலை 20—

சிங்கப்பூரில் இரண்டு நாட்களாக பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர். இந்த வேலை நிறுத்தத்தில் எல்லாவிதமான தொழிலாளர்களும் கலந்து கொள்கின்றனர். சவக்குழி தோண்டும் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

இதன் காரணமாக, பிணங்களைப் புதைக்க வருபவர்கள் புதை குழி தோண்ட யாருமில்லாத நிலையைக் கண்டனர்.

மாண்டுபோன தங்கள் உறவினர்களின் உடல்களைப் புதைக்கவல முஸ்லீம் தோழர்கள் தாங்களே புதை குழி தோண்டினார்களாம்.

வேலை நிறுத்தத்தால் தண்ணீர், கியாஸ் மின்சார சப்ளைகள் பாதிக்கப்படாமலிருக்க பிரிட்டிஷ் துருப்புகள், முக்கிய இடங்களைக் காவல் புரிகின்றனராம்.

தெருக்களில் ஏராளமான குப்பை சேர்ந்து கிடக்கிறதென்றும். தொண்டர்கள் பலர் முயன்றும் தெருக்களில் குவிந்து கிடக்கும் குப்பையை அகற்ற முடியவில்லை என்றும் தெரிகிறது.

தொண்டர்களைத் தாக்கிய இரு தொழிலாளர்களைப் போலீசார் கைது செய்தனர் என்று தெரிகிறது.

சமீபத்தில் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை, பல மாதங்களுக்கு முன்பிருந்தே அமுல் செய்ய வேண்டுமென்று தொழிலாளர்கள் கோரி, வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள்.

கிணறுகளில் சாராயம்!

சார்வார், ஜூலை 19—

சார்வாரில் பல்நத மறைவு செய்ய ஏராளமான கிணறுகள் மூழ்கிப் போயின.

இக்கிணறுகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கள்ளச்சாராயம் வெளிப்பட்டு விட்டதாம். பலர் கிணற்றில் மூழ்கி சாராயப் புட்டிகளை எடுப்பதைக் கண்டே போலீசார் பல கிணறுகளைச் சோதனையிட்டு 54 காலன் சாராயத்தைக் கைப்பற்றினார்கள் என்று தெரிகிறது.

அனந்தன் நம்பியார் மாஸ்கோ பயணம்

புதுடில்லி, ஜூலை 21—

தோழர்கள் ராமச்சந்திரா (அ. இ. தே. தொழிற் சங்கத் தலைவர்) அனந்தன் நம்பியார் (செயலாளர், தென் இந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம்) கே. டி. ராஜு எம்.எல்.ஏ. ஆகிய மூவரும், சோவியத் இரயில்வேக்களின் நிலைமைகளைத் தெரிந்துகொள்வதற்காக சோவியத் இரயில் போக்குவரத்துத் தொழிற் சங்கத் தலைவரின் அழைப்பிற்கிணங்க, மாஸ்கோவுக்குப் பயணமாயினர் அவர்கள் மூவரும் அங்கு ஒரு மாத காலம் தங்கி இருப்பர் எனத் தெரிகிறது.

ரயிலில் கொள்ளை!

சித்தூர், ஜூலை 22—

சென்னை வரும் பம்பாய் மெயிலில், தனியாக முதல் வகுப்பில் பிரயாணம் செய்த ஒருவரை முகமூடி அணிந்த திரண்டு நபர்கள், கோடூர்—ரெட்டிபொண்டா இடையில் மாமந்தூர் காட்டுப் பகுதியில் ஒடிக்கொண்டிருக்கும்போது கொள்ளையிட்டனர் என்று தெரிகிறது.

பிரயாணியை, கை, கால்களைக் கட்டிவிட்டு, சாமான்களையும், ரூ 100 ரொக்கத்தையும் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டனர் என்று தெரிகிறது.

முகவூரில் ஈ. வே. கி. சம்பத்

முகவூர், ஜூலை 21—

இவ்வூர் தி. மு. கழகக் கிளையின் சார்பில் கீழ வீதியில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதுவே மும்முனைப் போராட்ட வெற்றி விழா கூட்டமாகவும் அமையப் பெற்று, கூட்டம் இரவு 7-30 மணிக்குத் துவங்கியது.

தோழர் எஸ். முத்து தலைமை தாங்கி மும்முனைப் போராட்டத்தையும் கழகம் கண்ட வெற்றியையும் எடுத்துக் கூறினார். பின்னர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் சுமார் 2 மணி நேரம் மிக அருமையானதோர் அரசியல் சொற்பொழிவு நிகழ்த்தினார். நேருவின் வெளிநாட்டுக் கொள்கையின் நடைமுறை தன்மையையும், ஐந்தாண்டு திட்டத்தின் ஓரவஞ்சனையையும் புள்ளி விபரங்களோடு எடுத்துக்கூறி, தாமோதர் அணைக்கட்டு, பக்ரா நங்கல் அணைக்கட்டு ஆகியவற்றைக் கூறி, வெளிநாடுகளில் திராவிட மக்கள் படும் இன்னலை மிக உருக்கமாக விளக்கிப் பேசினார்.

மேலும் பேசுகையில், அகில இந்திய கட்சி என்ற பெயரோடு எதுவரினும், நம்மை அடிமையாக்கவே எனக் குறிப்பிட்டு, நடந்த இந்தி அழிப்பு இயக்கத்தில்—தமிழ் நாடு கம்யூனிஸ்டு கட்சியின் கருத்துப் புறக்கணிக்கப்பட்டதை ஒரு கோஷ்டியால் நிராகரிக்கப்பட்டதை சுட்டிக் காட்டினார் முடிவாக, தாய்நாட்டுப் பற்றும், தன்மானமும், தனி ஆட்சியும் நமக்கு வேண்டுமென்பதோடு, சமதர்ம திராவிடக் குடியரசு அமைக்க அனைவரும் பாடுபடவேண்டும் என்றும், எண்ணற்ற நாதப் பொருள்களைக் கொண்டுள்ள நம் திராவிடம் இன்ப பூமியாகத் திகழ பாடுபடுவோம் எனக் கூறி முடித்தார்.

போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதின் விளைவாக இந்தோ—சீனாவுக்கு போர்த் தளவாடங்களை ஏற்றுமதி செய்வது நிறுத்தப்பட்டது என்று வாஷிங்டனில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

என்னை ஒப்பந்தம்

என்னைப் பிரச்னையில் ஏற்பட்டுள்ள புதிய ஒப்பந்தப்படி, ஈரானில் கிடைக்கும் என்னையில் 12 சத விகிதத்தை, ஈரான் சர்க்கார், தனது விருப்பம்போல் விற்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

மறியல்

பிரெஞ்சிந்திய சத்தியாக்கிரகிகள், ரயில் முன்பு மறியல் செய்வதென்று தீர்மானித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ரயில் மூலம் செல்லும் பொருள்களையும் அவர்கள் தடுத்து நிறுத்துவார்கள் என்று தெரிகிறது.

களவு

சீல் வைக்கப்பட்ட ரயில் வாகன்களிலிருந்து பொருள்களைக் களவாடியதாக ராஜமகேந்திரபுரம் ரயில் நிலையத்தைச் சேர்ந்த ஐந்து காவல் சிப்பாய்களை போலீசார் கைது செய்தனர் என்று தெரிகிறது.

பயிற்சி

சென்னை ராஜ்யத்தைச் சேர்ந்த 28 வயதுக்குக் குறைவான மாணவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் விமானப் பயிற்சி அளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமென்று தெரிகிறது.

பிறப்பு

15—7—54 அன்று காலை 8 மணியளவுக்கு நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் பாலகுருசாமி அவர்களின் துணைவியார் தோழியர் வயிரத்துக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது தாயும்—சேயும் நலம்.

பெயர்சூட்டு விழா

15—7—54 வியாழனன்று முகவூர் தோழர் சங்கரலிங்கம், தோழியர் தனலட்சுமி ஆகியோர் குழந்தைக்கு தோழர் சம்பத் அவர்களால் பூங்கோதை எனப் பெயரிடப்பட்டது. அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடையளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றியுடையது—பொதுப்பாளர்.

• • •

4—7—54 ஞாயிறன்று ஆதனூர் தி. மு. கழக சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் டி. குப்புசாமி அவர்களின் மகனுக்கு தோழர் கெ. பி. சிற்றரசு அவர்களால் தம்பிதுரை எனப் பெயரிடப்பட்டதின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ.1 நன்கொடையளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றியுடையது— பொதுப்பாளர்.

அனுதாபம்

மணக்குளம் தி. மு. கழகத்தைத் தோற்றுவித்தவரும், முன்னாள் செயலாளருமான தோழர் ம. செ. விஸ்வநாதன் அவர்கள் தமது 35-வது வயதில் அகால மரணமடைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது பிரிவால் வாடும் அவர் குடும்பத்தாருக்கு மணக்குளம் தி. மு. கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது. அவர் மறைவு இவ்வட்டத்துக்கு ஒரு பெரிய ஈடுசெய்ய முடியாத நட்டமாகும்.

• • •

காமாட்சிப்பட்டி தி. மு. கழக கட்சி, செழியன் மறுமலர்ச்சி மன்ற படிப்பகத்தின் சந்தா சேகரிப்பாளர் தோழர் க. செட்டியான் அவர்களின் துணைவியார் பேச்சியம்மாள் இயற்கை எய்தியமைக்கு கழகத்தின் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

கண்டலா துறைமுகத் திட்டம்

வருடத்திற்கு 60 லட்சம் வருமானம் தருமாம்!

கண்டலா துறைமுக அபிவிருத்தித் திட்டம் 1957 ஏப்ரலில் முடிக்கப்படுமென்று அறிவிக்கப்படுகிறது. இத்துறைமுக அபிவிருத்தி வேலைகள் 1953-ல் துவங்கப்பெற்றன.

இந்தத் திட்டத்திற்கு தேவையான இயந்திர சாதனங்கள் சுமார் 75 லட்சம் ரூபாய்க்கு ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்படுகின்றன. ஏற்கனவே சுமார் 40 லட்சம் ரூபாய் பெறுமான சாமான்கள் வந்துவிட்டன.

கப்பல் சரக்கு இறக்குவதற்காக அமைக்கப் பெறும் தளம் 1955-ல் முடிக்கப்படுமாம்.

இந்தத் துறைமுகத்தில் இறக்குமதியாகும் பொருள்களில் பாதிக்கு மேல் எண்ணைச் சாமான்களாக இருக்குமாம். வருடத்திற்கு 5 லட்சம் டன் எண்ணை இறக்குமதி செய்யப்படுமெனத் தெரிகிறது இதனால் மட்டும் வருடத்திற்கு 50 முதல் 60 லட்சம் ரூபாய் இத்துறைமுக மூலமாக சர்க்காருக்கு வருமானம் கிடைக்கும் எனத் தெரிகிறது.

பர்மிய நாட்டுக்கான இராணுவ உதவி ஆலோசனைக் குழுவை அமெரிக்கா நியமனம் செய்திருக்கிறது. பிரிகேடியர் ஜெனரல் விகலியம் செக்ஸ்டன் என்பவர் இக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இலங்கை இந்தியர் பிரச்னை

திரு:— கொச்சி சர்க்கார் கவலை!

திருவனந்தபுரம், ஜூலை 21—

"இலங்கையில் குடி உரிமை இழந்த பாரதப்பற்றுள்ள இந்தியர்களை, திரும்ப வரவேற்றுக் கொள்ளும் பிரச்னை மத்திய சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது மத்திய அரசுதான் புதிதாக கொண்டுள்ள இலங்கைக் குடி உரிமைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டும் ஆனால், திரு—கொச்சி ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், அங்கிருந்து திரும்புபவர்களுக்கும் இப்பகுதி மக்களின் நிலைபற்றி மிகவும் கவலையுடன் யோசித்து வருகிறோம்" என்று, கொச்சி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் திரு — கொச்சி முதன் மந்திரி பட்டம் தாணுப்பிள்ளை குறிப்பிட்டார்

அவர் மேலும், இலங்கையில் உள்ள திரு—கொச்சி மக்களின் எண்ணிக்கை விபரம் சர்க்காரிடம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

அன்பளிப்பு

16—7—54 வெள்ளி கிழமை செல்லமடை தி. மு. க. பொதுக் கூட்டத்தில் தோழர் எஸ். மாயாண்டி ரூ 2-ம், கூத்தரசன் ரூ 1-ம் ஆக ரூ 3-ம் 'நம் நாடு' வளர்ச்சிக்கு அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொதுப்பாளர்.

திராவிடத்தில் - கண்ணாடி மணல்!

ஏராளமாகக் கிடைக்கிறதாம்

புதுடில்லி, ஜூலை 21—

கண்ணாடி செய்வதற்குத் தேவையான சிறந்த மணல் சென்னை ராஜ்யத்தைச் சேர்ந்த எண்ணூரிலும், திரு—கொச்சியில் சேர்த்தலை என்னுமிடத்திலும் ஏராளமாகக் கிடைக்கிறதாம்

இந்த மணலை அப்படியே பச்சை நிற கண்ணாடி செய்யப் பயன்படுத்தலாம் என்று தெரிகிறது.

இம்மணலைப் பரிசோதனை செய்ததில் குறைந்த செலவில் இந்த மணலைச் சுத்தம் செய்து உயர்தரக் கண்ணாடி செய்யப் பயன்படுத்தலாம் என்று தெரிகிறது.

உலக அரங்கில்

பெர்லின் :

கிழக்கு ஜெர்மனியில் சுற்றுப் பயணம் செய்ய சீனப் பிரதமர் சூ-என்-லாய் பெர்லின் வந்து சேர்ந்தார். ஜினீவா மாநாட்டின் வெற்றி, கிழக்கு மேற்கு ஜெர்மனியின் ஒற்றுமையைத் துரிதப் படுத்தும் என்று, தான் நம்புவதாக சூ-என்-லாய் கூறினார்.

கெய்ரோ :

'சூயஸ் நதிப் பள்ளத்தாக்கில் எந்த சுரண்டல்காரனையும் அனுமதிக்கமாட்டேன்' என்று, எகிப்திய ஜனாதிபதி நகீப், எகிப்திய இராணுவப் புரட்சியின் இரண்டாவது ஆண்டு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

இரங்கூன் :

மேற்கு பாகிஸ்தான் அதிகாரிகள் கைது செய்த பர்மிய முஸ்லிம் முஜாகத் கிளர்ச்சியின் தலைவர் மூசமது காசிமை, தனது நாட்டிற்கு அனுப்புமாறு பர்மிய சர்க்காரைக் கேட்குமென்று தெரிகிறது.

பாரிஸ் :

இந்தோ - சீனப் போர் நிறுத்தப் பேச்சு வார்த்தைகளில், ஈடனின் சேவையை பிரெஞ்சுப் பிரதமர் மெண்டே பிரான்ஸ் பாராட்டியிருக்கிறார்.

* * *

பிரான்சின் இந்தோ—சீன சேனாதிபதி ஜெனரல் எலி, தனக்கு கீழ் உள்ள ஐந்து லட்சம் துருப்புகளுக்கு வியட்மின்கள் மீது தாக்குதல் நடத்தவேண்டாமென்று உத்தரவிட்டிருக்கிறார்.

ஜினீவா :

வி. கே. கிருஷ்ணமேனன், பாரிஸ் சென்று பிரெஞ்சுப் பிரதமரைச் சந்திக்க இருக்கிறார். இந்தோ-சீனப் போர் நிறுத்த ஒப்பந்தம் பற்றிப் பேசுவார் என்று தெரிகிறது. மேனன் இம்மாத இறுதியில் புதுடில்லி வருவார் என்று தெரிகிறது.

* * *

ஐ. நா. சபையின் பொருளாதார கழகத்தின் கூட்டமொன்றில், முன்னேற்ற மடையாத நாடுகளுக்கு வியாபாரத்தை அதிகரிக்கத் தயார் என்று ருஷ்யா அறிவித்திருக்கிறது.

கொழும்பு :

கொழும்புத் தோட்டத் தொழிலாளர் கழகத்தின் இரண்டாவது மாநாடு முடிந்துவிட்டது. நவம்பர் மாதம் வரையில் இந்தியத் தூதுவரான சி. சி. தேசாய் இக்கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

லண்டன் :

பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் ஈடன், சூயஸ் கால்வாய் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள நாளை கெய்ரோ செல்வார் என்று தெரிகிறது.

வாஷிங்டன் :

அமெரிக்கக் கீழ் சட்டசபை சர்க்காரைப் பலாத்காரமாக கவிழ்க்க முயற்சிக்கும் நபரின் குடி உரிமையை ரத்து செய்யும் மசோதாவை நிறைவேற்றியிருக்கிறது.

ஹனோய் :

ஹனோயில் உள்ள இந்திய வர்த்தகர்கள் போர்நிறுத்த ஒப்பந்தம் தங்களை எவ்வாறு பாதிக்கிறது என்பது தெரியும் வரையில் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்திருக்கின்றனர்.

லிஸ்பன் :

போர்ச்சுகீசிய பத்திரிகையான டையரியோ மன் ஹா' நாரா கிராமத்தில் இந்தியத் தொண்டர்கள் நுழையுமாறு நேரு அனுமதித்தார் என்று குற்றம் சாட்டியிருக்கிறது.

போன் :

மேற்கு ஜெர்மனியின் பாதுகாப்பு அதிகாரியான ஹெர் ஹான்ஸ், மேற்கு ஜெர்மனியின் தப்பியும் இலாகா தலைவரான ஆட்டோ ஜான் கடத்திச் செல்லப்பட்டது உண்மைதான் என்று விசாரணையில் தெரிந்தது, என்று கூறியுள்ளார்.

ஹாங்காங் :

ஹைனன் தீவின் அருகே, விபத்திற்கு உள்ளாகிய ஒரு பிரிட்டிஷ் விமானம் கடலில் வீழ்ந்து விட்டதாம். 18 பேர் சென்ற அந்த விமானத்திலிருந்து 12 பேரை அமெரிக்கக் கடற்படை விமானமொன்று காப்பாற்றியது என்று தெரிகிறது.

ஜாகர்த்தா :

இந்தோனேஷ்ய முதலமைச்சர் அலி சாஸ்ட்ரோ மிட்ஜோ மாலமேவ், மெண்டே பிரான்ஸ், சூ-என்-லாய் ஆகியோருக்குப் பாராட்டுத் தந்திகள் அனுப்பியுள்ளார்.

சிங்கப்பூர் :

தீயணைப்புப் படையினர் சரியான முறையில் பயிற்சி பெறாதிருந்தால் சென்ற மார்ச்சில் ஏற்பட்ட விமான விபத்தில் 33 பேரைக் காப்பாற்றியிருக்க முடியும் என்று தீயணைப்பு படை நிபுணர் ஒருவர் சாட்சியம் கூறினார்.

முன்னாள் சோவியத் அமைச்சர் தூக்கிலிடப்பட்டார்

தவறாகப் பலரைக் கைது செய்தாராம்

லண்டன், ஜூலை 23—சோவியத் கூட்டாட்சியின் முன்னாள் உதவி பாதுகாப்பு அமைச்சரான எம். டி. ரூய்மின் என்பவர் இராணுவ நீதிமன்றமொன்றில் மரண தண்டனை விதிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார் என்று சோவியத் செய்தி நிலையமான 'டாஸ்' அறிவித்தது.

ஜூலை 2-ம் தேதி முதல் 7-ம் தேதி வரை நடைபெற்ற விசாரணையில் இராணுவ நீதிமன்றம் ரூய்மினுக்கு மரண தண்டனை விதித்ததாம்.

சோவியத் மக்களையும், சோவியத் டாக்டர்களையும் தவறான முறையில் ரூய்மின் கைது செய்ததாயும், சாட்சியங்களை சிதைத்து பொய் சாட்சியங்களை உண்டாக்கினார் என்றும் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டதாம்.

இவர் செய்திருக்கும் அபாயகரமான வேலைகள் விளைவித்த நாசத்தினைக் கருத்தில் கொண்டு சோவியத் உயர் நீதிமன்ற இராணுவப் பிரிவு இவருக்கு கடும் தண்டனையான மரணதண்டனை விதித்ததாம்.

தண்டனை நிறைவேற்றப்பட்டதாம்.

ஸ்டாலினின் மரணத்திற்கு முன்னர் ரூய்மின் சோவியத் டாக்டர்கள் பலரைக் கைது செய்தார் என்றும், இது சம்பந்தமாக ஏப்ரலில் ரூய்மென் கைது செய்யப்பட்டார் என்றும் 'பிராவ்தா' எழுதியுள்ளது.

இந்தியப் பிரதமர் நேரு இந்தோனேஷியாவில் ஆட்சி எழுந்துள்ள பிரச்சினைகளை நேரில் ஆராய இந்தோனேசியாவுக்கு செல்வார் என்று தெரிகிறது.

மயிலை தி. மு. க. பொதுக் கூட்டம்

★

அண்ணாதுரை பேசுவார்

25—7—54 மாலை 5 மணிக்கு, சென்னை, மயிலை, கபாலீஸ்வரர் சன்னதித் தெருவில், தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் அண்ணாதுரை சொற்பொழிவாற்றுவார். தோழர் நாகூர் அனீபா இயக்கப் பாடல்கள் பாடுவார்.

கழகக் கூட்டம்

★

சைதாப்பேட்டை

காரணீஸ்வரர் கோவில் தெரு (தேரடி மைதானம்)

சைதை தி. மு. கழக 4-வது ஆண்டு விழா

26—7—54 மாலை 6 மணிக்கு

தலைவர் : எஸ். ஆர். வேலன்

பேசுவோர் :

ஈ. வே. கி. சம்பத்
எஸ். அப்பாவு
பி. அண்ணாமலை
க. முருகேசன்

திருவள்ளுவர் நினைவுத் திருநாள்

27—7—54 மாலை 6 மணிக்கு வரசித்தி விநாயகர் கோவில் தெரு, அமைந்தகரையில், அறிவு வளர்ச்சி இயக்கச் சார்பில் தோழர் என். ஏ. ரஷீத் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், கண்ணன், கோவைநாதன் ஆகியோர் பேசுவர்.

திருவள்ளுவர் திருநாள்

குறள்நெறிக் கழகத் தலைவர் அன்பழகன் வேண்டுகோள்

குறள்நெறிக் கழகத் தலைவர் க. அன்பழகன், திருவள்ளுவர் திருநாள் பற்றி கீழ்க்கண்ட அறிக்கை வெளியிட்டுள்ளார் :—

"திருவள்ளுவர் திருநாள்—பொங்கல் நாளைப் போலவே தமிழர் தேசியத் திருநாளாக—மக்கள் விழா நாளாக அமையும் தகுதி சான்றதாகும்.

"தைத் திருநாள் நிகழ்ந்து ஆறு திங்களெல்லாம்—ஆவணித் துவக்கத்தில் ஒன்று, ஆண்டின் மறுபாதியின் மற்றொன்று என்ற முறையில்—திருவள்ளுவர் திருநாள் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதும். அதன்படியே, ஆடிப் பதினெட்டாம் நாளை ஒட்டி, ஜூலை இறுதி வாரத்தில் ஒரு நாளை வள்ளுவர் நாளாகக் கொண்டாட வேண்டுமென்று குறள்நெறிக் கழகத்தில், முன்னரே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அண்மையில் (11—7—54 அன்று) அண்ணாமலை நகரில் கூடிய சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டிலும், ஜூலை இறுதி வாரத்தில் ஒரு நாளைச் சென்னை அரசினர், திருவள்ளுவர் நாளாகக் குறித்து பொது விடுமுறை அளிக்க வேண்டுமென்று ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருப்பது, வள்ளுவர் வாரத்திற்கு—ஆதரவு அளிப்பதாகும். தமிழ் மக்கள் அதை ஏற்று செயல் புரிவது கடமையாகும்.

"தமிழகம் வள்ளுவர் நாளைத் திருவள்ளுவர் கிழமையாகவே (ஒரு வாரம்) கொண்டாடலாம் என்றெண்ணியே, ஆடி 10 முதல் 16 முடிய (25—7—54 முதல் 31 வரை) ஏழு நாட்களையும்—வள்ளுவர் வாரம் என்று குறித்துள்ளோம். விழாவினை விரிவாக நடத்த விழைவாரும், அந்நாட்களிலே இயலாதாரும் அதன்பின் மூன்று நாட்களிலும் விழா நடத்தலாம். பேரூர்களில், அதன் பல பகுதிகளிலும், பல நாட்கள் தொடர்ந்தும் சிற்றூர்களில் ஓரிரு நாட்களிலும் விழா கொண்டாடலாம்.

"கல்லூரிகளிலும், பள்ளிகளிலும், தமிழ்க் கழகங்களிலும் கலை மன்றங்களிலும், கட்சி அமைப்புக்களாலும், பொது நிலையங்களாலும், திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட வேண்டும்.

"கொடியுயர்த்தல், தோரணம் கட்டல், அலங்கரித்தல், புத்தாடை உடுத்தல், ஊர்வலம் வருதல், விழாக் கூட்டம் நடத்தல் முதலிய பலவும் விழா நாளில் மேற்கொள்ள வேண்டும்.

"குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்தல், ஏழைகளின் பசி களைதல், உழவருக்குத் தொண்டாற்றல் முதலிய சமூகப் பணிகளும் சிறப்புடைத்தக்கன.

"அவ்விழாவில் திருவள்ளுவரின் கருத்துக்கள், கைவிடப்பட்ட கொள்கைத்தை குறள்நெறி குலைய நேர்ந்ததை விளக்குவதோடு, திருக்குறள் ஆட்சியை நிலை நாட்டத் துணையாம், திருநாளே அந்நாள்! திருக்குறளைப் பரப்பும், திருப்பணியை, வகுப்புக்கள் நடத்தும் முயற்சியை இந்நாளில் ஊக்குவித்திடுதலும் பெரும் பயனாகும்."

அண்ணா அவர்கள் தலைமையில்
வண்ணை தியாகராயர் கல்லூரியில்
25-7-54 ஞாயிறு இரவு 9½ மணிக்கு
கலைத்தூதன் செல்வா குழுவினரின்
"தவறியவள் ?"
நாடகம் நடைபெறும்
கட்டணம் :—ரூ. 2, 1, அணா 8.

'திராவிட நாடு அமையவதை...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தோன்றவில்லை. தோன்றுவதற்கு நியாயமில்லை என்றே கருதுகிறோம். ஏனெனில் பண்டிதருக்கு நாங்கள் வேற்று நாட்டவர்தானே ?

ர. வீ : நண்பர் பாண்டியன் ! நீங்கள் என் மனதைப் புண்படுத்துவதற்காகவே வந்திருக்கிறீர்கள் போலும். இதுவரையிலும் என் மனம் இவ்வளவு புண்படும்படியாக யாரும் பேசியதில்லை. எங்களை வேற்று நாட்டவர் என்று நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள் ? என்பது எனக்குத் தெரியவில்லை. உங்களை நான் எனது நண்பர் தோழன் என நினைக்கிறேன். நீங்களோ என்னை வேறு நாட்டவன் என்கிறீர்கள். என் மனம் மிக வேதனைப்படுகிறது. நீங்கள் குறிப்பிட்ட அந்த நிகழ்ச்சி உண்மையானால் மத்திய நிர்வாகம் சரியில்லை என்று பொருள்படக் கூடும். அந்த நிர்வாகம் சரிவர நடைபெறுமாறு செய்யப்பட்டால் இப்படிக் குறைகள் சொல்ல இடமிருக்காது என நினைக்கிறேன்.

ந. நி : இது நான் சொல்லியுள்ள இரண்டாவது எடுத்துக்காட்டு இப்படி எத்தனையோ காட்ட முடியும். இம்மாதிரி ஒவ்வொரு காரியத்திற்கும் வடநாட்டு எஜமானர்களை நாங்கள் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பது நியாயமா? எங்களின் சௌகரியங்களை நாங்களே தேடிக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் நினைப்பது எப்படித் தவறாகும் இது அரசியல் துறையில் இருக்கிற ஆதிக்கம் இன்னும் பொருளாதாரத் துறையில்...

ர. வீ. : பார்த்தீர்களா ! நீங்கள் ஆளப்படுவதாகச் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். வடவர் தென்னவர் என்று பிரித்துப் பேசுகிறீர்கள் நான் சொல்கிறேன் உங்களை எல்லாம் தமிழர்களை எல்லாம் எங்கள் சோதரர்கள் என்று நான் நினைக்கிறேன்.

ந. நி. : இப்படிச் சொல்லியும் தென்னாட்டவரை ஆளலாம் என்று நினைக்கிறீர்கள். ஆதிக்கம் செலுத்த நினைப்பவர்கள், யார் மீது ஆதிக்கம் கொள்ள நினைக்கிறார்களோ அவர்களை சோதரர்கள் என்று நினைப்பதாகச் சொல்வதும் அன்பு பாராட்டுவதாக நடிப்பதும், அவர்கள் கையாளுகிற ஒரு தந்திரம் அவ்வளவு தானே தவிர, நீங்கள் சொல்கிற மாதிரி எங்கள் மீது உங்களுக்கும் பற்றும் பாசமும் இருக்க நியாயமில்லை. எங்கள் மீது உங்களுக்குப் பற்றும் பாசமும் எப்படி இருக்க முடியும்? எந்த வகையில் தென்னாட்டவருக்கும் வடநாட்டவருக்கும் ஒற்றுமை உணர்வு இருக்கிறது? அதையாவது சொல்லுங்கள் நான் தெரிந்துகொள்கிறேன்.

ர. வீ : நாம் எல்லோரும் இந்தியர்கள் என்கிற உணர்வு இருக்கிறதே அதுபோதாதா?

ந. நி. : அங்கேதான் தகராறே ஆரம்பமாகிறது நாங்கள் எங்களை இந்தியர்கள் என்று கூறிக்கொள்ளவில்லையே. திராவிடர்கள் என்றல்லவா கூறுகிறோம்.

ர. வீ. : நாங்கள் அப்படி அல்லவே, எங்களுக்கு ஆரியர்கள் என்ற உணர்வே ஏற்படவில்லையே.

ந. நி. : உங்களுக்கு ஆரியர் என்ற உணர்வு ஏற்படாததாலேயே உண்மை இல்லை என்று ஆகிவிடுமா ?

ர. வீ :- நாங்கள் ஆரியர் என்று கூறிக் கொள்வதில்லை.

ந. நி ;- நாங்கள் திராவிடர்கள் என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைகிறோம். நீங்கள் ஆரியர் என்று கூறிக் கொள்ள வெட்கப்படுகிறீர்களோ என்னவோ ?

(தொடர்ச்சி வெளிவரும்)

இராவிடநாடு முன்னேற்றக் கழகத் துக்காக சிதம்பரம் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (நீ, ஆதிநாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.